ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 3.1 – முடிச்சோதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.1 – முடிச்சோதி

‡ முடிச் சோதியாய் ⋆
உனது முகச் சோதி மலர்ந்ததுவோ ⋆
அடிச் சோதி நீ நின்ற ⋆
தாமரையாய் அலர்ந்ததுவோ ⋆
படிச் சோதி ஆடையொடும் ⋆
பல் கலனாய் ⋆
நின் பைம் பொன் கடிச் சோதி கலந்ததுவோ ⋆
திருமாலே ! கட்டுரையே ‖ **3.1.1** ‖

கட்டுரைக்கில் தாமரை ⋆
நின் கண் பாதம் கை ஒவ்வா ⋆
சுட்டுரைத்த நல் பொன் ⋆
உன் திருமேனி ஒளி ஒவ்வாது ⋆
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் ⋆
புகழ்வெல்லாம் பெரும்பாலும் ⋆
பட்டுரையாய்ப் புற்கென்றே ⋆
காட்டுமால் பரம் சோதீ ! ‖ **3.1.2** ‖

பரம் சோதி ! நீ பரமாய் ⋆
நின் இகழ்ந்து பின் ⋆
மற்றோர் பரம் சோதி இன்மையின் ⋆
படி ஓவி நிகழ்கின்ற ⋆
பரம் சோதி நின் உள்ளே ⋆

படர் உலகம் படைத்த ⋆
எம் பரம் சோதி கோவிந்தா ! ⋆
பண்புரைக்க மாட்டேனே ‖ **3.1.3** ‖

மாட்டாதே ஆகிலும் ⋆
இம்மலர் தலை மா ஞாலம் ⋆
நின் மாட்டாய மலர் புரையும் ⋆
திரு உருவம் மனம் வைக்க ⋆
மாட்டாத பல சமய ⋆
மதி கொடுத்தாய் ⋆
மலர்த் துழாய் மாட்டே நீ மனம் வைத்தாய் ⋆
மா ஞாலம் வருந்தாதே ‖ **3.1.4** ‖

வருந்தாத அரும் தவத்த ⋆
மலர் கதிரின் சுடர் உடம்பாய் ⋆
வருந்தாத ஞானமாய் ⋆
வரம்பின்றி முழுதியன்றாய் ⋆
வரும் காலம் நிகழ் காலம் ⋆
கழி காலம் ஆய் ⋆
உலகை ஒருங்காக அளிப்பாய் சீர் ⋆
எங்குலக்க ஓதுவனே ‖ **3.1.5** ‖

ஓதுவார் ஓத்தெல்லாம் ⋆
எவ்வுலகத்தெவ்வெவையும் ⋆
சாதுவாய் நின் புகழின் ⋆
தகை அல்லால் பிறிதில்லை ⋆
போது வாழ் புனம் துழாய் ⋆
முடியினாய் ⋆

பூவின் மேல் மாது வாழ் மார்பினாய் ! ⋆
என் சொல்லி யான் வாழ்த்துவனே ॥ **3.1.6** ॥

வாழ்த்துவார் பலர் ஆக ⋆
நின் உள்ளே நான்முகனை ⋆
மூழ்த்த நீர் உலகெல்லாம் ⋆
படை என்று முதல் படைத்தாய் ⋆
கேழ்த்த சீர் அரன் முதலாக் ⋆
கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து ⋆
சூழ்த்தமரர் துதித்தால் ⋆
உன் தொல் புகழ் மாசூணாதே ॥ **3.1.7** ॥

மாசூணாச் சுடர் உடம்பாய் ⋆
மலராது குவியாது ⋆
மாசூணா ஞானமாய் ⋆
முழுதுமாய் முழுதியன்றாய் ⋆
மாசூணா வான் கோலத்து ⋆
அமரர் கோன் வழிப்பட்டால் ⋆
மாசூணா உன பாத ⋆
மலர்ச் சோதி மழுங்காதே ॥ **3.1.8** ॥

மழுங்காத வைந் நுதிய ⋆
சக்கர நல் வலத்தையாய் ⋆
தொழும் காதல் களிறளிப்பான் ⋆
புள் ஊர்ந்து தோன்றினையே ⋆
மழுங்காத ஞானமே ⋆
படை ஆக ⋆

மலர் உலகில் தொழும்பாயார்க்களித்தால் ⋆
உன் சுடர்ச் சோதி மறையாதே ‖ **3.1.9** ‖

மறை ஆய நால் வேதத்துள் நின்ற ⋆
மலர்ச் சுடரே ⋆
முறையால் இவ்வுலகெல்லாம் ⋆
படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய் ⋆
பிறை ஏறு சடையானும் ⋆
நான்முகனும் இந்திரனும் ⋆
இறை ஆதல் அறிந்தேத்த ⋆
வீற்றிருத்தல் இது வியப்பே ‖ **3.1.10** ‖

‡ வியப்பாய வியப்பில்லா ⋆
மெய்ஞ்ஞான வேதியனை ⋆
சயப் புகழார் பலர் வாழும் ⋆
தடம் குருகூர்ச் சடகோபன் ⋆
துயக்கின்றித் தொழுதுரைத்த ⋆
ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
உயக்கொண்டு பிறப்பறுக்கும் ⋆
ஒலி முந்நீர் ஞாலத்தே ‖ **3.1.11** ‖

அடிவரவு — முடிச்சோதியாய் கட்டுரை பரஞ்சோதி மாட்டாதே வருந்தாத ஓதுவார் வாழ்த்துவார் மாசூணா மழுங்காத மறையாய வியப்பாய முந்நீர்

முடிச்சோதி முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்